**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 338/2024**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருப்பசாமி | தொழில் | : | பீடி சுற்றும் வேலை |
| கிராமம் | : | அண்ணாமலைபுதூர் | வயது | : | 22 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 14th, 2025.

**(1 எதிரி ஆஜரில்லை. 2 ம் எதிரி ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் அண்ணாமலைபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி வான்மதி என்னுடைய அத்தை மகள். எதிரி மாரியப்பன் வான்மதியை தான் கல்யாணம் செய்வேன் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். வான்மதியை ஜெகதீசன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுக்க நிச்சயிக்கப்பட்டது. பூ வைக்கும் நிகழ்ச்சிக்கு ஒருநாள் முன்பு பாட்டி வீட்டில் நானும், வான்மதியும் பேசிக்கொண்டிருந்தோம். மாரியப்பன் அப்போது பைக்கில் வந்தார். அவருடன் ஆஜர் எதிரி முத்துசெல்வமும் வந்தார். வீட்டிற்குள் வந்து வான்மதியை மாரியப்பன் கெட்ட வார்த்தைகளால் திட்டினார். முதுகுக்கு பின்னால் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து, "என்னைத் தவிர நீ யாரையும் கல்யாணம் செய்யக்கூடாது" என்று கூறிக்கொண்டு "நீ செத்து போ," என்று கூறி

வான்மதியின் வலது தோள்பட்டை, இடது தோள்பட்டை மற்றும் இடது கை, முதுகு ஆகிய பகுதிகளில் வெட்டினார். தலையில் வெட்டும்போது அவர் கை வைத்து தடுத்தார். அந்த வெட்டு இடது காதின் அடிப்பக்கத்தில் பட்டது.

நாங்கள் இரண்டு பேரும் கத்தினோம். மாரியம்மாள் என்பவர் தடுக்க வந்தார். அவருடைய கையில் வெட்டுப்பட்டது. பின்னர், வான்மதியை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்று விட்டு, பின்னர் நாகர்கோவில் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.15 18:28:28 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 338/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியம்மாள் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சண்முகம் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | அண்ணாமலைபுதூர் | வயது | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 14th, 2025.

**(1 எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் அண்ணாமலைபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். வான்மதியை தெரியும். அவர் எனது மதினி மகள். 2016ம் ஆண்டு 7வது மாதம் தேதி ஞாபகமில்லை. காலை 7, 8 மணியளவில் நான் என்னுடைய வீட்டில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அப்போது, செல்வி வான்மதியை வெட்டுகிறார்கள் என்று சத்தம் போட்டார். நான் ஓடி வந்து வான்மதியின் பாட்டி வீட்டிற்கு வந்தேன். அங்கு மாரியப்பன் வான்மதியை அரிவாளால் வெட்டி கொண்டிருந்தார். நான் தடுக்க சென்றேன். அப்போது, என்னுடைய வலது கை விரலில் காயம் ஏற்பட்டது. வான்மதியின் கழுத்திலும், காதிற்கு அருகிலும், தோள்பட்டைகளிலும் காயம் இருந்தது. கை தொங்கியபடி இருந்தது. எதிரி மாரியப்பன் வெட்டிய போது, எதிரி முத்துசெல்வம் அருகில் நின்றார்.

எதிரி மாரியப்பனும், முத்துசெல்வமும் போகும் போது "நீ யாருடனும் வாழக்கூடாது" என்று சொல்லிவிட்டு சென்றார்கள். வான்மதியை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நான் ஊத்துமலையில் அன்புராஜா தனியார் மருத்துவமனையில் கையில் ஏற்பட்ட காயத்திற்கு ஊசி போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.15 18:28:37 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 338/2024**
**வழக்கு சாட்சி PW–4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காளியம்மாள் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முத்தையா | தொழில் | : | பஞ்சாயத்து வேலை |
| கிராமம் | : | அண்ணாமலைபுதூர் | வயது | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 14th, 2025.

**(1 எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் அண்ணாமலைபுதூரில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சாயத்தில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். வான்மதியை தெரியும். அவர் எனது மகள். மாரியப்பன் என்னுடைய அம்மாவின் தங்கை மகன். அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார், போவார். என்னுடைய மகள் வான்மதியை அவருக்கு கட்டிக்கொடுக்க கேட்டார். எனக்கு விருப்பமில்லை. வான்மதிக்கும் விருப்பமில்லை என்று சொன்னார். மாரியப்பனுக்கு குடிப்பழக்கம் உள்ளதினால் எனக்கு அவருக்கு கட்டிக்கொடுக்க விருப்பமில்லை. வான்மதி படித்துகொண்டிருந்த பள்ளிக்கூடத்திலும் போய் தொந்தரவு செய்து வந்தார். வான்மதிக்கு மாரியப்பனின் டார்ச்சர் தாங்க முடியாததினால் வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்தேன். ஜெகதீஷ் என்பவருடன் வான்மதியை திருமணம் செய்ய பேசியிருந்தோம்.

பூ வைக்கும் நிகழ்ச்சிக்கு ஒரு நாள் முன்பு, சாயங்காலம் 03.00 மணியளவில் குடித்து விட்டு எங்கள் வீட்டிற்கு மாரியப்பன் வந்துள்ளார். நான் பொருட்கள் வாங்குவதற்காக வெளியே சென்றேன். எனக்கு என்னுடைய மகளை வெட்டி வீட்டில் போட்டிருப்பதாக தகவல் வந்தது. நான் வீட்டிற்கு வந்தபோது, வான்மதியின் இடது கையில் வெட்டுப்பட்டு துண்டாகி கிடந்தது. வான்மதியின் இரண்டு தோள்பட்டை, முதுகு, விரல்கள் ஆகியவற்றில் வெட்டுக்காயம் இருந்தது. வான்மதியை ஆம்புலன்சில் ஊத்துமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டு அங்கு பார்க்க முடியாது என்று சொன்னதினால், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கும் முடியாது என்று சொன்னார்கள். பின்னர், திருநெல்வேலி அரசு மருத்துவமனை கொண்டு சென்றோம். அங்கும் முடியாது என்று சொன்னார்கள். பின்னர் நாகர்கோவில் சுஸ்ருசா மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு 30 நாட்கள் என் மகள் சிகிச்சையில் இருந்தார்.

அங்கு போலீசார் வந்து விசாரித்தபோது, என் மகள் வாக்குமூலம் கொடுத்தார். நான் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.15 18:28:44 +0530